## தெஹிவளை கல்கிஸ்ஸ மாநகர சபை
## கொழும்பு மாவட்டம்

### 1 நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 ஏப்ரல் 01 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2019 மே 30 ஆந் திகதியும், விரிவான முகாமைத்துவ அறிக்கை 2019 ஆகஸ்ட் 01 திகதியும் சபைக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து தெஹிவளை கல்கிஸ்ஸ மாநகர சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்கீட்டு குறைபாடுகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| i | 2018 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய சாக்கடை பவுசர் சேவை வருமானம் வருமானப் பதிவேட்டின் பிரகாரம் ரூபா 830,545 தொகை எனினும் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 3,139,738 தொகை ஆகக் காணப்பட்டமையால் சாக்கடை பவுசர் கடன் பட்டோர் ரூபா 2,309,193 தொகை மிகையாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும் | 2019 இறுதிக் கணக்குகளில் சரி செய்யப்படும். |
| ii | மீளாய்வாண்டு குப்பைகள் அகற்றுவதற்காக கழிவுப் பொருள் முகாமைத்துவ அதிகார சபைக்கு ரூபா 56,707,126 தொகை செலுத்தியிருந்த போதிலும் நிதிக் கூற்றுக்களில் செலவுகள் என ரூபா 64,129,940 தொகை காட்டப்பட்டிருந்தமையினால் செலவுகள் ரூபா 7,422,814 தொகை மிகையாகக் காட்டப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கின்றேன். எதர்காலத்தில் சரியான முறையில் கடன் கொடுத்தோர் ஏற்பாடுகள் ஒதுக்குவற்காக குறித்துக்கொண்டேன். |

| | | | |
|---|---|---|---|
| iii | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு பெற வேண்டிய மாகாண சபை உதவி கடன் பட்டோர் பெறுமதி ரூபா 2,309,193 தொகை எனினும் நிதிக் கூற்றுக்களில் பெறுமதியொன்று காட்டப்பட்டிருக்காமையினால் நடைமுறை சொத்துக்கள் ரூபா 2,309,193 தொகையினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | தவறுதலாக மாகாண சபை உதவி கடன்பட்டோர் மீதியில் சேர்க்கப்பட்டிருந்ததால் இந்தத் தவறு நேரிட்டிருந்தது. 2019 ஆண்டிற்கான கணக்குகளில் சரி செய்யப்படும். |
| iv | 2018 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சம்பள மீளளிப்பு கடன்பட்டோர் மீதி ரூபா 133,520,842 தொகை எனினும் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் சம்பள மீளளிப்பு கடன்பட்டோர் மீதி ரூபா 151,776,950 தொகை காணப்பட்டமையினால் நடைமுறைச் சொத்துக்கள் ரூபா 18,256,108 தொகையினால் மிகையாக காட்டப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும் | 2017 ஆம் ஆண்டின் நிலுவை சம்பள மீளளிப்பு பெறுவனவு கணக்கீடு செய்யும் போது தவறுதலாக பதிவுகள் மாற்றிப் பதிவு செய்யப்பட்டமையினால் 2019 இறுதிக் கணக்குகளில் சரிசெய்யப்படும். |
| v | நிதிக் கூற்றுக்களில் கடன் கொடுத்தோர் ஏற்பாடுகள் மேற்கொள்ளும் போது செலுத்த வேண்டிய தரப்பிரனர் மற்றும் செலுத்த வேண்டிய தொகையை இனங்காணாமல் எவ்வளவு என கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையினால் (முன்னைய ஆண்டுகளிலும்) மீளாய்வாண்டின் போது திரண்ட நிதியத்திற்கு ரூபா 5,439,034 இற்கான வரவு வைத்தல் மற்றும் ரூபா 34,306,975 இற்கான செலவு வைத்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | செலுத்த வேண்டிய தரப்பினர் மற்றும் செலுத்த வேண்டிய தொகை எவ்வளவு என அறுதியாக இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். 2019 ஆண்டிற்கான கணக்குகளில் சரிசெய்யப்படும். |
| vi | கணினி மென்பொருள் முறைமைக்காக செலுத்தப்பட்டிருந்த ரூபா 2,990,543 இற்கான தொகை கணினி மென்பொருளின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சரியாகக் கணகக்கீடு செய்யப்படவேண்டும் | இந்த பதியப்படாத கணினி மென்பொருள் செலவு 2019 கணக்குகளில் சரிசெய்யப்படும். |
| vii | 2015 மற்றும் 2012 ஆண்டுகளில் நன்கொடையாக கிடைத்திருந்த 04 வாகனங்களின் பெறுமதியை கணக்கீடு செய்திருக்கவில்லை. | நன்கொடை சொத்துக்கள் கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2012 மற்றும் 2015 ஆண்டுகளில் நன்கொடையாக கிடைத்திருந்த 04 வாகனங்களின் பெறுமதியை தேடிப்பெற முடியாமையினால் கணக்கீடு செய்ய முடியாமல் இருந்தது. 2019 கணக்குகளில் சரி செய்வேன். |

**(ஆ) நிகழக்கூடிய பொறுப்புக்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| குப்பைகள் அகற்றுவது தொடர்பாக பர்ன்ஸ் கம்பனியினால் சபைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கின் தீர்ப்பின் பிரகாரம் சபையினால் ரூபா 20,958,780 தொகை மற்றும் கட்டணமாக ரூபா 300,000 இற்கான தொகை ஒன்று செலுத்த வேண்டியிருந்தது. இந்தத் தீர்ப்பிற்கு எதிராக சபையினால் வாணிப சபையில் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கின் தீர்ப்பும் சபைக்கு பிரதி கூலமாக வழங்கப்பட்டிருந்தது. அதேபோல் சபையினால் தற்போது உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கு விசாரணை செய்யப்படுவதுடன் அதற்காக ரூபா 1,506,333 செலவொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. | சபைக்கு அனுகூலமாக செயற்படுவது பொருத்தமானது | ரூபா 1,506,333 தொகை 04 வழக்குகளுக்கே செலுத்தப்பட்டுள்ளது. இந்த வழக்கு இதுவரை முடிவடைந்து இருக்காதுடன் விடயங்களை உறுதிப் படுத்துவதற்காக 2019.07.18 திகதி அழைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. |

**(இ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| i. | நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள 14 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் அவற்றுடன் தொடர்புடைய துணைப் பதிவேடுகள் / அறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளுடன் இணக்கஞ் செய்த போது நிதிக் கூற்றுக்களில் ரூபா 871,329 தொகை குறைவாகவும் மற்றும் ரூபா 85,277,399 தொகை மிகையாகவும் காட்டப்பட்டிருந்தது. | குறிப்பிட்ட மீதிகளின் வித்தியாசங்களை இணக்கஞ் செய்து கணக்குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். | 2019 கணக்குகள் தயாரிக்கும் போது தேடிப் பெற்று சரி செய்யப்படும். |
| ii. | நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் LLDF கடன் கொடுத்தோர் என ரூபா 1,320,538 இற்கான மீதியொன்று காட்டப்பட்டிருந்த போதிலும் பேரேட்டுக் கணக்குகளின் பிரகாரம் மீதி ரூபா 897,946 தொகை ஆகக் காணப்பட்டமையினால் ரூபா 422,592 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது. | குறிப்பிட்ட மீதிகளின் வித்தியாசங்களை இணக்கஞ் செய்து கணக்குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். | 2019 இறுதிக் கணக்குகளில் சரி செய்யப்படும். |

**(ஈ) பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| i. | 2002 முதல் 2018 ஆண்டு வரை வருமானம் என பெற்றருந்த ரூபா 562,786 தொகை பெறுமதியான 20 காசோலைகள் மதிப்பளிக்கப்பட்டிருக்காதுடன் அதற்கான பணத்தை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மதிப்ளிக்கப்படாத காசோலைகள் தொடர்பாக தாமதமின்றி பணம் அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பணம் அறவீடு செய்ய நடவடிக்கை எடுப்பேன். |
| ii. | 2008 முதல் 2016 வரையான காலப்பகுதி தொடர்பாக 11 நிறுவனங்களில் இருந்து அறவிடப்பட வேண்டிய சாக்கடை பவுசர் வருமானம் ரூபா 65,545 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பெறவேண்டிய வருமானங்களை தாமதமின்றி அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கவேண்டும். | அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என அறவிக்கின்றேன். |
| iii. | 2006 மற்றும் 2007 காலப்பகுதி தொடர்பான ரூபா 121,456 தொகைக்கான தீர்க்கப்படாத ஆதனக் கடன் வட்டி முற்பண மீதி உட்பட 2018 திசெம்பர் 31 திகதியளவில் பெறவேண்டிய ரூபா 2,230,599 தொகையான மொத்த தொகையை உள்ளூராட்சி திணைக்களத்தில் இருந்து மீளளிப்புச் செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஆதனக் கடன் வட்டியினை மீளளிப்புப் செய்வதற்காக நடவடிக்கை எடுக்கவேண்டும். | மீதித் தொகையை மீளளிப்புச் செய்வதற்காக ஆரம்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| iv. | இரத்மலானை விஷேட பொருளாராத மத்திய நிலையத்தின் குப்பைகளை அகற்றுவது தொடர்பாக மிஸ்டர் கிளீன் என்வயமன்ட் நிறுவனத்தில் இருந்து 2017 ஆண்டு முதல் அறவிடப்பட வேண்டிய ரூபா 82,425 இற்கான தொகையினை அறவீடு செய்யவதற்கு முடியாதிருந்தது. | பெறவேண்டிய வருமானத்தை தாமதமின்றி அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | ஏதிர்காலத்தில் அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். |

**(உ) கணக்காய்விற்கு தேவையான எழுத்துமூலச் சான்றுகள் இன்மை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| i. | தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 12,618,278 தொகைக்கான 04 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருத்திகரமாக மெய்மையாய்வு செய்வதற்கு முடியாதிருந்தது. | மீதிகளை உறுதிப்படுத்துவதற்காக தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன் |
| ii. | 2014 ஜனவரி 21 திகதிய 1846/19 இலக்கம் கொண்ட அதிவிஷேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலின் படி சபை அங்கத்தவர்களுக்கு மாதாந்தம் ரூபா 6,500 பிரயாணச் செலவு மீளளிப்புச் செய்ய முடியும் எனினும் 46 அங்கத்தவர்களுக்காக 2018 ஆண்டு ஏப்ரல் முதல் செப்டம்பர் வரை ரூபா 1,794,000 இற்கான தொகையொன்று போக்குவரத்துச் செலவு விபரங்கள் இன்றி செலுத்தப்பட்டிருந்தது. | கொடுப்பனவிற்காக சான்றுகள் சமர்பிக்கப்பட வேண்டும். | ஏதிர்காலத்தில் சரியான படிவங்கள் பயன்படுத்துமாறு மந்திரிமாருக்கு அறிவூட்டுதவற்கு அறிவிக்கின்றேன். |
| iii. | 2012 ஜுலை 05 ஆந் திகதிய பொதுக் கூட்டத்தில் 08(02) அ.67 சபைத் தீர்மானத்தின் படி தொலைபேசி அழைப்புக் கட்டணம் மாதாந்தம் ரூபா 6000 இற்கான உச்ச அளவு ஒன்று அடிப்படையில் கொடுப்பனவு செய்ய முடியும் எனினும் அங்கத்தவர் ஒருவருக்கு ரூபா 35,066 தொகை சிட்டைகள் சமர்பிக்கப்படாமல் மாதாந்தப் படி ஒன்றாக செலுத்தப்பட்டிருந்தது. | கொடுப்பனவிற்காக சான்றுகள் சமர்பிக்கப்பட வேண்டும் | சிட்டைகள் சமர்பிக்கும்படி குறிப்பிட்ட பெண் உறுப்பினருக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது. கிடைத்ததும் கணக்காய்விற்காக சமர்பிப்பேன். |

**1.4 இணக்கமின்மை**

**1.4.1. சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 252) பிரிவுகள் 218 மற்றும் 286 (அ) | சபையின் நிர்வாகம் தொடர்பாக அறிக்கையொன்று மற்றும் பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் தொடர்பான கூற்று சமர்பித்திருக்கவில்லை. | மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 252) பிரிவுகள் 218 மற்றும் 286 (அ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | அறிக்கை தயாரிக்கப்படுகின்றது. கூடிய விரைவில் சமர்பிப்பேன். |
| **(ஆ)** | **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம்** | | | |
| i. | நி.பி 110 | நட்டங்கள் மற்றும் சேதங்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | நி.பி 110 பிரகாரம் செயற்பட வேண்டும். | நட்டங்கள் மற்றும் சேதங்கள் பதிவேடு எதிர்காலத்தில் பேணுவதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |
| ii. | நி.பி 188(2) | வைப்புச் செய்திருந்த போதிலும் தேறப்படாத ரூபா 59,234 தொகை பெறுமதியான 07 காசோலைகள் மற்றும் 02 காசுக் கட்டளைகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நி.பி 188(2) இன் பிரகாரம் செயற்பட வேண்டும் | ரூபா 54,234 தொடர்பாக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கின்றேன். |
| iii. | நி.பி 571 | 2 வருடங்களை மிகைத்துள்ள வைப்புக்கள் ரூபா 16,525,237 தொகை தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நி.பி. 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கவேண்டும். | 02 வருடங்களை மிகைத்துள்ள வைப்புக்களை வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது என அறிவிக்கின்றேன். |

**(இ) பொது நிர்வாக சுற்றறிக்கை**

| | | | |
|---|---|---|---|
| 2016 திசெம்பர் 29 திகதிய 30/2016 இலக்கம் கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கை பந்தி 3:1 | சபைக்குச் சொந்தமான வாகனங்களின் எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | 2016 திசெம்பர் 29 திகதிய 30/2016 இலக்கம் கொண்ட பொது நிர்வாக சுற்றறிக்கையின் பந்தி 3:1 பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் வசதியை பொருத்து வாகனங்கள் எரிபொருள் எரிதல் பரிசோதனை செய்வதற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. |

**(ஈ) திறைசேரி சுற்றறிக்கை**

| | | | |
|---|---|---|---|
| 2002 நவம்பர் 28 திகதிய IAI/2002/2 இலக்கம் கொண்ட திறைசேரி சுற்றறிக்கை | கணிணிகள் மற்றும் மென்பொருட்களுக்காக தனியாக நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று பேணிச்செல்லப்பட்டிருக்கவில்லை. | 2002 நவம்பர் 28 திகதிய IAI/2002/2 இலக்கம் கொண்ட திறைசேரி சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். | 2019 ஆண்டில் கணிணிகள் மற்றும் மென்பொருட்களுக்காக நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 299,585,345 தொகையாகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 341,690,299 தொகையாக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

| | | |
|---|---|---|
| வங்கி இணக்கக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது நேர் செலவு வைத்தல்களை உரிய முறையில் இணங்கானாமல் தொடர்ந்தும் காணப்படுவதினால் காசேட்டின் படி பிரதிகூலமான மீதியொன்று காணப்பட்டது. | நேர் செலவு வைத்தல்கள் குறிப்பிட்ட மாதத்தில் உரிய முறையில் இனங்காண வேண்டும் | தற்போது வங்கி இணக்கக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது தொடர்ந்து வரும் மாதத்தில் நேர் செலவு வைத்தல் மற்றும் வரவு வைத்தல்களை இனங்கண்டு கணக்கீடு செய்தல் மேற்கொள்ளப்படுகிறது. எதிர்காலத்தில் இந்தத் தவறை சரி செய்வேன் என அறிவித்துக் கொள்கிறேன். |

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதி யில் உள்ள வாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதி யில் உள்ள வாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| | 000’ | 000’ | 000’ | 000’ | 000’ | 000’ | 000’ | 000’ |
| வீதவரி மற்றும் வரி | 424,300 | 400,112 | 375,515 | 368,936 | 365,100 | 686,095 | 243,364 | 343,178 |
| வாடகை | 19,035 | 16,217 | 12,638 | 16,548 | 29,747 | 27,975 | 10,862 | 15,285 |
| அனுமதிப்பத்தி ரக் கட்டணம் | 23,500 | 45,731 | 16,895 | 86,815 | 34,235 | 94,318 | 18,893 | 62,782 |
| ஏனைய வருமானங்கள் | 300,000 | - | 184,543 | 514,918 | 433,815 | 355,995 | 320,332 | 173,227 |

### 2.3.3 வீதவரியும் வரியும்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **வீதவரி** | | |
| (i) | மீளாய்வாண்டிற்காக சிட்டையிடப்பட்ட வீதவரி வருமானம் ரூபா 354,286,573 தொகை எனினும் அவற்றில் ரூபா 108,714,624 தொகை அதாவது 31 சதவீதத்தை அறவீடு செய்வதற்கு சபைக்கு இயலாது இருந்தது. | சிட்டையிடப்பட்ட வீத வரியினை ஆண்டின் போது அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். | அனைத்து ஆதணங்களுக்காக வீத வரி செலுத்தும்போது சில ஆதனங்களுக்காக தாமதமாக கொடுப்பணவு செய்யப்படுவதுடன் வீத வரி செலுத்தப்படாத ஆதனங்களுக்காக சிவப்பு அறிவித்தல் வழங்கப்பட்டு அந்த வரியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது. |

| | | | |
|---|---|---|---|
| (ii) | 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலுவை வீத வரி மீதி ரூபா 337,835,697 தொகை எனினும் அவற்றின் மீளாய்வாண்டின் போது ரூபா 93,113,598 அதாவது 31 சதவீத்தை அறவீடு செய்திருக்கவில்லை. | நிலுவை வீதவரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவை வீதவரி சேகரிக்கும் அலுவல்களுக்காக பேதியளவு பதவியணியினர் காணப்படாமையினால் அந்த வேலைகள் தாமதமாகக் காரணமாக இருந்தது. நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்காக செய்முறையொன்று தற்போது தயாரிக்கப்படுகின்றது. |
| (iii) | மீளாய்வாண்டின் போது 193 ஆதனங்களுக்காக சிவப்பு அறிவித்தல் வழங்கங்கப்பட்டு ரூபா 63,705,107 இற்கான நிலுவை வீத வரி தொகை அறவீடு செய்வதற்கு எதிர்பார்த்த போதிலும் ரூபா 18,164,908 இற்கான தொகை அதாவது 29 சதவீதம் அறவிடப்பட்டிருந்ததுடன் சிவப்பு அறிவித்தல் வழங்கப்பட்டிருந்து 126 வீத வரி அலகுகளில் இருந்து பணம் ஏதும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வீத வரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவை வீதவரி காணப்பட்ட ஆதனங்களுக்காக சிவப்பு அறிவித்தல் வழங்கப்பட்டு ஆதனங்களை தடை செய்வதாக அறிவிக்கப்பட்டு அதன் பின்னர் ஆதனங்களை தடை செய்து அதன் மூலம் நிலுவை வீதவரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. |
| (iv) | வீதவரி அறவீடு செய்வதற்காக சிவப்பு அறிவித்தல் வழஙகும் போது 56 ஆதணங்கள் வெளிக் களப் பரசேதனையின் போது இணங்கான முடியாதிருந்ததுடன் அதன் மூலம் அறவிடப்பட வேண்டிய நிலுவைத் தொகை ரூபா 11,569,092 தொகையாக இருந்தது. | ஆதனங்களை அறுதியாக இனங்கண்டு சிட்டை இடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | வெளிக்களப் பரிசேதனைகளின் போது இனங்காண முடியாதிருந்த ஆதனங்கள் தொடர்பாக தொடர்ந்தும் பரிசோதனைகள் மேற்கொள்வதற்காக பெறுமதி மதிப்பீட்டு பரிசோதகர் பிரிவிற்கு அனுப்பட்டிருப்பதுடன் அவர்களின் அறிக்கை கிடைத்த பின்னர் தொடர் நடவடிக்கை தொடர்பாக கவனம் செலுத்தப்படும். |
| (v) | 2018 திசெம்பர் 31 திகதி அளவில் வீதவரி அறவிடக்கூடிய 84013 தொகை ஆதனங்கள் காணப்பட்டதுடன் அவற்றில் 39609 ஆதனங்களில் இருந்து ரூபா 345,923,440 இற்கான வீதவரி நிலுவை ஒன்று காணப்பட்டது. அவற்றில் ரூபா 100,000 தொகையை மிகைத்துள்ள 424 வீதவரி அலகுகளில் இருந்து ரூபா 131,926,030 இற்கான தொகை ஒன்று அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை வீத வரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இனங்காண முடியாத ஆதனங்கள் தொடர்பாக வருமானப் பரிசோதகர் உத்தியோகத்தர்கள் மற்றும் பெறுமதி மதிப்பீட்டு உத்தியோகத்தினரினால் பரிசோதகர் மேற்கொள்ளப்படுவதுடன் மீதியான ஆதனங்களுக்காக சிவப்பு அறிவித்தல் வழங்கப்பட்டு நிலுவை வீதவரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (vi) | ரூபா 50,000 இற்கும் ரூபா 100,000 இடைப்பட்ட பெறுமதி உடைய 617 வீதவரி அலகுகளில் இருந்து ரூபா 43,373,869 இற்கான தொகை ஒன்று அறவிடப்படவேண்டிக் காணப்பட்டது. | நிலுவை வீதவரி அறவிடப்பட வேண்டும் | ரூபா 100,000 விட கூடிய பெறுமதி உடைய ஆதனங்களில் நகரசபை ஆதனங்களும் அடங்கி இருந்ததுடன் அந்த ஆதனங்களில் நிலுவை வீதவரியை பதிவேட்டில் இருந்து அகற்றுவதற்காக அனுமதியைப் பெறுவதற்காக நிதிக் குழுவிற்கு சமர்பிக்கப்பட்டிருந்தது. |
| (vii) | 28 வட்டாரங்களில் கூடிய நிலுவைத் தொகையாகிய ரூபா 48,431,364 தொகை ரத்மலான மேற்கு வட்டாரத்தில் இருந்தே அறவிடப்பட வேண்டி இருந்ததுடன் அந்த நிலுவை வீத வரியை அறவீடு செய்வதற்காக ஆதனங்களை தடை செய்யும உத்தியோகத்தர் ஒருவர் ஈடுபட்டிருக்கவில்லை. | நிலுவை வீத வரி அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 28 ஆம் வட்டாரத்திற்காக ஆதனங்களை தடை செய்யும் உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செய்திருந்ததுடன் தற்போது அவர் நிலுவை வீதவரி அறவீடு செய்யும் அலுவள்களில் ஈடுபட்டிருக்கிறார். |

**(ஆ) குப்பை வரி**

-------------------

| | | | |
|---|---|---|---|
| i. | சபையினால் குப்பைகள் அகற்றப்படும் வியாபார நிலையங்களுடன் உடன்படிக்கைகள் மேற்கொண்டிருக்காமையினால் நிலுவைக் குப்பைக் கட்டணம் அறவீடு செய்யும் போது சட்ட ரீதியாக நடவடிக்கை மேற்கொள்ள முடியாது இருந்ததுடன், 2003 நவம்பர் 18 திகதிய இலக்கம் 08(10)35 கொண்ட சபைத் தீர்மானம் மற்றும் நிதிக் குழுவின் ஆலோசனையின் பிரகாரம் நிலுவைக் குப்பைக் கட்டணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையினால் 2018 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலுவைக் குப்பை வருமானம் ரூபா 9,542,119 தொகையாக இருந்தது. | நிலுவை குப்பை வரி அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். | சுகாதார நிருவாகிகளுக்கு நிலுவை குப்பை வரி அட்டவணை வழங்கப்பட்டு ஒரு மாதத்தில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கும்படி அறிவித்துள்ளேன். |

| | | | |
|---|---|---|---|
| ii | 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய குப்பை வருமானம் ரூபா 9,768,276 தொகையாக இருந்ததுடன் அவற்றில் அறவிடப்பட முடியாதிருந்த ரூபா 4,232,299 தொகை மீளாய்வாண்டின் போது திரண்ட நிதியத்திற்கு பதிவழிக்கப்பட்டிருந்தது. | நிலுவை மீதிகள் ஏற்படாதவாறு ஆண்டின் போது செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நடைமுறையில் உள்ள கணக்கீட்டு முறையின்படி ஆரம்ப மீதியில் இருந்து பெறுவனவு தவிர மீதியான நிலுவைகளை திரண்ட நிதியத்திற்கு சீராக்கல் மேற்கொண்டு 2018.12.31 திகதியில் உள்ளவாறு நிலுவையை மீண்டும் கணக்கீடு செய்யப்பட்டது. |
| iii | முன்னைய ஆண்டில் இருந்து முன் கொண்டுவரப்பட்ட நிலுவை மீதிகள் காணப்பட்ட 155 நிறுவனங்களுக்கு மீளாய்வாண்டின் போது உரிய சேவைகள் வழங்கப்பட்டிருந்த போதும் நிலுவை கொடுப்பனவு அல்லது ஆண்டிற்கான தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமையினால் அதற்கான நிலுவை மீதி ரூபா 5,709,325 வரை அதிகரித்திருந்தது. | நிலுவைக் குப்பை வரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் கட்டனங்கள் செலுத்தாத நிறுவனங்களுக்கு சேவைகள் வழங்கப்படக் கூடாது. | நிலுவை குப்பைவரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். |
| **(இ)** | **களியாட்ட வரி (திரைப்படச் சாலைகள்)**<br>---------------------------------------------------------- | | |
| | மீளாய்வாண்டின் போது ரூபா 5,033,376 இற்கான வருமானம் ஒன்று கிடைத்திருந்த போது 2018 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலுவை மீதியாகிய ரூபா 154,302 இற்கான இற்கான தொகையை அறவீடு செய்யவதற்கு முடியாதிருந்தது. | நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதில் அனுப்பியிருக்கவில்லை. |
| **(ஈ)** | **ஏனைய வரிகள்**<br>--------------------------- | | |
| | 2018 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலுவை கேபல் டீ.வீ. வருமானம் ரூபா 4,114,151 தொகை, விஷேட விளம்பர அறிவித்தல் நிலுவை மீதி ரூபா 6,202,810 மற்றும் விஷேட விளம்பர அறிவித்தல் (வீதி பெயர்ப் பலகைகள்) நிலுவை மீதி ரூபா 3,000,000 இற்கான தொகையினை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை மீதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவை மீதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**2.3.4 வாடகை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **கடை வாடகை** | | |
| i. | 2018 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலுவை கடை வாடகை வருமானம் ரூபா 8,997,060 தொகையை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்காதுடன் 03 மாதங்களை விஞ்சிய நிலுவைக் கடை வாடகை காணப்பட்ட 235 கடைகள் காணப்பட்டன. | உடன்படிக்கையின் நிபந்தனைகளின் படி நடவடிக்கை எடுக்கவேண்டும். | 2018.12.31 திகதியில் உள்ளவாறு நிலுவைக் கடை வாடகையை 2019.01.31 திகதிக்கு முன்னர் செலுத்தும் படி வாடகையாளர்களுக்கு அறிவிக்கப்பட்டது. அவ்வாறு நிலுவை வாடகை செலுத்தாத வாடகையாளர் தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |
| ii | 2014 ஆண்டு முதல் காணப்படும் நிலுவை இறைச்சிக் கடைவாடகை மீதியாகிய ரூபா 2,471,517 தொகையை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் | பலவின வருமான பிரவின் பேரேட்டில் அவ்வாரான முன்கொண்டுவரப்பட்ட மீதியொன்று காணப்பட வில்லை என பேரேடுகளை அவதானித்த போது காணக்கூடியதாக இருந்தது. |
| **(ஆ)** | **ஆதனங்களை குத்தகைக்கு கொடுத்தல் (குத்தகை உறுதி )** | | |
| (i) | மதிப்பிடப்பட்ட வருமானம் ரூபா 1,400,000 தொகை எனினும் ஆண்டின் போது ரூபா 477,412 தொகை அறவீடு செய்யப்பட்டிருந்தது. | மதிப்பீட்டு வருமானத்தை உழைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்கான நடைமுறைகள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. |

| | | | |
|---|---|---|---|
| (ii) | 2018 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 17 ஆதனங்களில் இருந்து அறவிடப்படவேண்டியிருந்த குத்தகை ரூபா 5,079,510 தொகையாகக் காணப்பட்டதுடன் அவற்றில் 10 ஆதனங்களின் நிலுவை 03 மாதங்களை மிகைத்திருந்த போதிலும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மதிப்பீட்டு வருமானத்தை உழைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் | 2018.12.31 திகதியில் உள்ளவாறு குத்தகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் அவ்வாறு இல்லாத குத்தகைகள் தொடர்பாக சட்டநடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

**2.3.5 அனுமதிப்பத்திரக் கட்டணம்**

-----------------------------------------

| | | | |
|---|---|---|---|
| i. | மீளாய்வாண்டிற்கான சிட்டையிடப்பட்ட கைத்தொழில் மற்றும் வியாபார வரி வருமானம் ரூபா 35,050,583 தொகை எனினும் அவற்றில் ரூபா 28,984,433 தொகை அதாவது 83 சதவீதத்தை அறவீடு செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை மீதியை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் | சிட்டையிடலை சரிசெய்து நிலுவையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. |
| ii. | 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலுவை கைத்தொழில் மற்றும் வியாபார வரி மீதி ரூபா 57,729,233 தொகை எனினும் அவற்றில் மீளாய்வாண்டின் போது ரூபா 2,046,045 தொகை அதாவது 3.5 சதவீதம் அறவிடப்பட்டிருந்ததுடன் ரூபா 55,683,188 தொகையை அறவீடு செய்வதற்கு முடியாது இருந்தது. | நிலுவை மீதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் | குறிப்பிட்ட சரிசெய்தல் மேற்கொள்ளப்பட்ட பின்னர் சரியான நிலுவை மீதியை அறவீடு செய்வதற்கு உரிய சட்ட நடவடிக்கைகளுக்காக தேவையான செயற்பாடுகள் மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது. |
| iii. | 2018 ஆண்டிற்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்பட வேண்டிய வியாபார நிலையங்களின் எண்ணிக்கை 1400 தொகை என இனங்கண்டிருந்த போதிலும் 758 தொகைக்காக அனுமதிப் பத்திர வழங்கியிருக்கவில்லை. | அனுமதிப் பத்திரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் | கணப்பீடு ஒன்றின் பின்னர் சரியான வியாபார நிலையங்களின் எண்ணிக்கையில் வியாபார அனுமதிப் பத்திரங்கள் வழங்கியிருக்காத வியாபார நிலையங்களுக்காக எதிர்காலத்தில் சட்டத்தின் படி நடவடிக்கை எடுப்பதற்கு தேவையான செயற்பாடுகள் எடுக்க நேரிடும். |

**2.3.6 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

**(அ) நீதிமன்றத் தண்டப்பணம்**

| | | | |
|---|---|---|---|
| i. | மதிப்பீட்டு வருமானம் ரூபா 20,000,000 தொகை எனினும் ஆண்டின் போது பெற்றிருந்த நீதிமன்றத் தண்டப்பண வருமானம் ரூபா 4,543,325 தொகையாகும். | மதிப்பீட்டு வருமானத்தை உழைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நீதி மன்றத் தண்டப்பண வருமானத்தை அறவீடு செய்வதற்காக தற்போது அட்டவணைகள் தயாரிக்கப்படுகின்றன. |
| ii. | உணவுச் சட்டத்தின் கீழ் 2018 ஆண்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு ஒன்றில் இருந்து தண்டப்பண வருமானம் கிடைத்திருக்கவில்லை. 2017 ஆம் ஆண்டில் தாக்கல் செய்யப்பட்டிருந்த 26 வழக்குகளுக்காக ரூபா 277,125 ற்கான தண்டப்பண வருமானம் ஒன்று நகர சபைக்கு உரித்தாக உள்ளது என கல்கிஸ்ஸ நீதி மன்றத்தின் மூலம் அறிவிக்கப்பட்டிருந்த போதும் அந்தத் தொகை சபைக்கு பெற்றுக் கொள்வதற்கு 2018 திசெம்பர் 31 திகதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தண்டப்பண வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | பொதுச் சுகாதார பரிசேதகர் ஊடாக இந்தப் பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| iii. | 2014 முதல் 2018 திசெம்பர் 31 திகதி வரையான காலப்பகுதி தொடர்பாக நிலுவை நீதிமன்றத் தண்டப்பண வருமானம் ரூபா 127,646,752 தொையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை வருமானம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் | 2017 ஆண்டிற்கு முன்னர் நீதிமன்றத் தண்டப்பணம் தகவல்களை பதிவதற்காக சபையின் உத்தியோகத்தர்களுக்கு நீதி மன்றத்தில் இருந்து அனுமதி கிடைத்திருக்காமையினால் அந்தக் காலப்பகுதிக்கான தண்டப்பணத்தை அறவீடு செய்வதற்கு முடியாமல் போனாலும் 2017 பின்னர் நீதி மன்றத்திற்கு எங்கள் உத்தியோகத்தர்களை அனுப்பி தயாரிக்கப்பட்ட அட்டவணைகளின் மூலம் நீதி மன்றத் தண்டப் பணம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது. |

**(ஆ) முத்திரைக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மேல் மாகாண சபையில் இருந்து 2018 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 387,271,620 தொகை காணப்பட்டது. | ஆண்டிற்கான முத்திரைக் கட்டணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | முத்திரைக் கட்டண அட்டவணைகள் தயாரிக்கப்பட்டு வருவதனால் குறிப்பிட்ட முத்திரைக் கட்டணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றுகை**

**(அ) செயல் நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகளுக்காக வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை. | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டடமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | தயாரிக்கப்பட்டு வருகின்றது. |
| **(ஆ) எதிர்பார்த்த நலன்களை பெற்றுக்கொள்ளாமை** | | |
| வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் பெருந் தெருக்கல் நிர்மாணிப்பதற்காக காணிகள் உரித்தாக்கிக் கொண்டிருக்கும் போது தெஹிவளை பெயாலயின் வீதியில் கடத்தொழிளாலர்கள் வீடுகளுக்கு அண்மையில் கரப்பந்தாட்ட விளையாட்டுத் திடல் ஒன்று நிர்மானிப்பதற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 284,477 இற்கான செலவு பயனற்ற செலவொன்றாகியுள்ளது. | சபை நிதியம் உச்ச மட்ட வினைத்திறனுடன் பயன்படுத்தப்பட வேண்டும். | தேவையான சந்தர்ப்பத்தில் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(இ) செய்பணிகள் நிறைவேற்றுவதில் தாமதம்**

| | | |
|---|---|---|
| பொது நிதியத்தில் இருந்து செயற்படுத்தப்பட வேண்டிய 48 செயற்திட்டங்களில் 41 செயற் திட்டங்களின் வேலைகள் ஆரம்பிப்பதற்கான உடன்படிக்கை வருட இறுதியில் சில தினங்களில் மேற்கொள்ளப்பட்டிருந்தால் செயற் திட்டங்களை பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்ததுடன் 02 செயற்திட்டங்களுக்காக 2019 மார்ச் 01 திகதி வரை ஒப்பந்தக் காரருடன் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | செயற் திட்டங்களை உரிய காலத்தில் நிறைவேற்றுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | செயற்திட்டங்களை நிறைவேற்றும் போது செயற்திட்ட பிரேரணைகள் கிடைத்த நாள் முதல் ஒப்பந்தங்களை வழங்குதல் மற்றும் உடன்படிக்கை மேற்கொள்ளல் வரையான காலம் குறைந்த பட்சம் 04 மாதங்கள் காணப்பட்டமையினால் இந்த செயற் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக 2018 ஆண்டில் உடன்படிக்கைக்கு அனுகி இருந்ததுடன் அதற்கான நிதி ஏற்பாடுகள் பலவினக் கடன் கொடுத்தோர்களின் கீழ் 2019 ஆண்டிற்கு எடுத்துச் செல்லப்பட்டது |

**(ஈ) திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ஆண்டின் போது மாநகர சபையின் அதிகாரப் பிரதேசத்தில் வகைப்படுத்தப்படாத குப்பைகள் 30,885 தொன்கள் காணப்பட்டதுடன் குப்பைகளை சேகரித்தல் உரிய முறையில் முகாமைத்துவம் செய்யப்படாமையினால் கலவை குப்பைகளுக்காக ரூபா 23,163,750 தொகை மிகையாக செலுத்த நேரிட்டிருந்தது. | குப்பை சேகரித்தல் உரிய முறையில் முகாமைத்துவம் செய்யப்பட வேண்டும். | வகைப்படுத்தப் படாத குப்பையில் பலவினக் குப்பைகள் மற்றும் வகைப்படுத்தப்படாத குப்பைகள் என 02 வகையான குப்பைகள் அடங்குவதனால் அவை முறைசார் விதமாக மேற்கொள்ளப்பட்டிருக்கக வில்லை. 2019 ஆண்டு முதல் அதனை முறைசார் விதமாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

**3.2 முகாமைத்துவ திறமையின்மை**

**(அ) வரைபுகள் அங்கீகரித்தல் மற்றும் இணக்கச் சான்றுதழ் வழங்குதல்.**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| | கட்டிடங்கள் நிர்மாணிப்பதற்காக வரைபுகளை அங்கீகரிக்கும் போது அந்தக் கட்டிடம் நிர்மானிக்கப்படும் நிலத் துண்டை அங்கீகரிக்காமல் கட்டிட வரைபை மாத்திரம் அங்கீகரித்திருந்த 34 சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. | வரைபுகள் அங்கீகரிக்கும் போது காணித் துண்டுகள் அங்கீகரிக்கப்பட்டி ருக்கின்றனவா என உறுதிப்படுத்த வேண்டும் | கட்டிடங்கள் நிர்மானிக்கும் விண்ணப்பங்கள் சமர்பிக்கும் போது சில கோவைகளுக்காக 1986 மார்ச் மாத்திற்கு முன்னர் அதாவது நகர அபிவிருத்தி அதிகார சபை சட்டத்தை அமுல் நடத்த முன்னர் துணைப் பகிர்வு செய்யப்பட்டிருந்த தரைத் துண்டுகளின் வரைபுகள் சமர்பிக்கப்படுகின்றன. நகர அபிவிருத்தி அதிகார சபை பிரமாணங்களின் படி அந்தத் துணைப் பகிர்வுகள் அங்கீகரிக்க தேவை இருக்கவில்லை. |
| (ii) | நகர அபிவிருத்தி அதிகார சபையினால் வெளியிடப்பட்டிருந்த வரைபுகள் மற்றும் கட்டிட பிரமாணங்கள் 2008-2020 இல் 14(1)அ ஆகிய உப பிரிவின் படி வரைபுகள் அங்கீகரித்தல் 08 வாரங்களுக்குள் செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் தரைத்துண்டு வரைபுகள் 45 சந்தர்ப்பங்களில் 115 முதல் 380 நாட்கள் வரையான கால வீச்சொன்று மற்றும் 22 கட்டிட வரைபுகளுக்காக 141 முதல் 360 நாட்கள் வரையான கால வீச்சு ஒன்று காணப்பட்டது. | தாமத காலத்தை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | இந்தக் கோவை திட்டமிடல் குழுவினால் குறைபாடுகளை சுட்டிக் காட்டிய கோவையாகும். சில கோவைகளில் திருத்தங்கள் விண்ணப்பதாரியினால் மேற்கொள்ளப்பட்டு இருக்காததுடன் சில நிறுவனங்களினால் சிக்கலற்றவை என சான்றுதல்கள் வழங்குவதில் தாமத்தின் காரணத்தினாலும் இந்த விண்ணப்பங்களை அங்கிகரிப்பதில் தாமதம் ஏற்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| (iii) | நகர அபிவிருத்தி அதிகார சபையின் பிரமாணங்களின் படி 04 மாடி மற்றும் 12 அலகுகளையும் கொண்ட கூட்டு ஆதமனக் கட்டிடம் (condominium) ஒன்றிற்காக ாதையின் குறைந்த பட்ச அகலம் 19.5 அடிகள் (06 மீற்றர்) ஆகக் காணப்பட வேண்டியிருந்த போதிலும் நகர சபை மாவத்தையில் அமைந்துள்ள பாதையின் அகலம் 10 அடிகள் ஆகும். | நகர அபிவிருத்தி அதிகார சபையின் பிரமாணங்களின் படி செயற்பட வேண்டும் | திட்டமிடல் குழுவினால் கலந்துரையாடி அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. |
| (iv) | விண்ணப்பிக்கப்பட்ட இணக்கச் சான்றிதழ்கள் மற்றும் வழங்கப்பட்ட இணக்கச் சான்றிதழ்களின் விபரங்கள் அடங்கிய பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்காமையால் விண்ணப்பிக்கப்பட்ட இணக்கச் சான்றிதழ்கள் தாமதமின்றி வழங்கப்பட்டதை உறுதிப்படுத்த முடியாது இருந்தது. மீளாய்வாண்டின் போது 295 இணக்கச் சான்றிதழ்களுக்காக விண்ணப்பித்திருந்த போதிலும் அவற்றில் 176 வழங்கப்பட்டிருந்தது. அதே போல் விண்ணப்பிக்கப்பட்ட இணக்கச் சான்றிதழ்கள் வழங்குவதற்காக 06 மாதங்களை விட மிகையான காலம் கடந்திருந்த சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. | இணக்கச் சான்றிதழ் தாமதமின்றி வழங்கப்பட வேண்டும். | இணக்கச் சான்றதழ்கள் வழங்குவதற்காக பதிவேடு ஒன்று பேணப்பட்டு வருவது எனவும், விண்ணப் பத்திரங்களில் காணப்படும் குறைபாடுகளின் காரணமான இவ்வாறான நிலைமை ஏற்படுகின்றது. |

**3.2 மனித வள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு இறுதியளவில் 230 வெற்றிடங்களும் 02 மிகைப் பதவியணியில் காணப்பட்டது. | வெற்றிடங்களை நிரப்புதற்காக ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட வேண்டும் | வெற்றிடங்களை நிரப்புவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பேன் |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது நிரந்தரக் கடமைகளுக்கு புறம்பாக ஏனைய கடமைகள் ஈடுபடுத்தப்பட்டிருந்த 58 ஊழியர்கள் காணப்பட்டனர். | நிரந்தர பதவிகளில் ஊழியர்கள் ஈடுபடுத்தப்பட வேண்டும் | தற்போது அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் காணப்படும் அனேகமானவை தற்கால சேவைகளின் தேவைக்காக போதியளவாக காணப்படாததுடன் சாரதிப் பதவிகள் மற்றும் நிருவாகப் பதவிகள் நாளாந்த சேவை வழங்கும் கருமங்களுக்காக |

| | | | |
|---|---|---|---|
| | | | அத்தியவசியமான பதிவிகளாகக் காணப்படுவதால் சேவை அத்தியவசியத் தன்மையின் மீது தொழிலால் ஊழியர்கள் அப்பதவிகளுக்கு இணைக்கப்பட்டு கடமைகள் நிறைவேற்றப்படுகின்றது. |
| (இ) | 2018 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட இறந்த மற்றும் ஓய்வுபெற்ற ஆட்களிடம் அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன் ரூபா 1,277,723 தொகை மற்றும் இடமாற்றம் பெற்று சென்றுள்ள ஆட்களிடம் ரூபா 495,335 தொகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவைக் கடன் மீதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் | ஏதிர்காலத்தில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |
| (ஈ) | பொது நிர்வாகச் சுற்றறிக்கை 03/2016 இன் 22 ஆம் இலக்கத்தின் படி செயற்படாமையால் சபையில் கடமையாற்றிய ஊழியர் ஒருவருக்கு 2013 முதல் 2015 வரை சம்பள அதிகரிப்பும் வழங்கப்பட்டு நிலுவை சம்பளம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்காததுடன் 2015 ஆண்டில் முறையான விசாரணையொன்று மேற்கொள்ளாமல் வேலை இடை நிறுத்தப்பட்டிருந்தது. 2016.12.21 திகதி முதல் கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்டு 2018.08.17 ஆந் திகதி முதல் மீண்டும் சேவை வழங்கப்பட்டிருந்த போதிலும் 2019 ஏப்ரல் 30 ஆந் திகதி ஒழுக்காற்று நடவடிக்கை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | ஒழுக்காற்று விசாரணை தாமதமின்றி நடாத்தப்பட்ட வேண்டியிருந்ததுடன் அதன் பிரகாரம் சம்பளத் திருத்தம் தொடர்பாக கவனம் செலுத்த வேண்டும் | இது தொடர்பாக முறையான விசாரணை ஒன்று நடைபெறுவதால் அவரின் வேண்டுகோள் தொடர்பாக கவனம் செலுத்தப்படும். |
| (உ) | சபையின் அதிகாரப் பிரதேசத்தின் 27 இடங்களில் கடமைகளுக்கா | ஊழியர் மேற்பார்வை மற்றும் உள்ளகக் கட்டுப்பாடு | மேலதிக நேர வேலைகள் வழங்கப்படாமை சமூகளிக்காத நாட்கள் எனக் கணித்து ஒரு |

| | | | |
|---|---|---|---|
| | ஈடுபடுத்தப்பட்டிருந்த 95 ஊழியர்கள் அந்தக் கடமை இடங்களில் காணப்படாமை தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | செய்முறை முறைப்படுத்தப்பட வேண்டும். | நாள் சம்பளத்தை வெட்டுதல் மற்றும் என்பன இவ்வாறான நிகழ்வுகளை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கும் படி அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. |
| (ஊ) | நீண்ட காலம் முதல் பிரதான நூலகர் விஷேட தர வெற்றிடம் ஒன்று காணப்பட்டதுடன் தற்போது அந்தப் பதவியில் நூலகர் III தர பெண் உத்தியோகத்தர் ஒருவர் கடமை மேற்கொண்டு வருகிறார். | நூலகர் விஷேட தர வெற்றிடத்தை நிரப்புதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நூலகர் விஷேட தரப் பதவி 2013.01.01 திகதி புதிய பதவியணிக்கு அங்கீகாரம் வழங்கிய போது புதிதாக ஏற்பட்ட பதவி ஒன்றாக காணப்பட்டதுடன் இந்தப் பதவிக்கான நியமன அதிகாரி மேல்மாகாண பகிரங்க சேவை ஆணைக்குழு என்பதால் அவ்வெற்றிடம் தொடர்பாக கடிதங்களின் மூலம் மற்றும் உரிய படிவத்தின் மூலம் அதிகார நிறுவனத்திற்கு அடிக்கடி அறிவூட்டியுள்ளேன். |

**3.4 செயற்பாட்டு திறமையின்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்குச் சொந்தமான 371 கடைகளில் 286 இல் இருந்து நிலுவை வாடகை காணப்பட்டதுன் அனேகமான கடைகள் வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்த போதிலும் வாடகையாளர்களுடன் உடன்படிக்கைகளுக்கு அனுகியிருக்கவில்லை. அதே போல் சில உடன்படிக்கைகளில் உடன்பட்ட காலம் முடிவடைந்திருந்த போதிலும் மீண்டும் உடன்படிக்கையை புதுப்பிப்பதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வாடகைக்கு கொடுக்கும் போது உடன்படிக்கை மேற்கொள்ளப்பட வேண்டியிருந்ததுடன் குறிப்பிட்ட கால வரையறையின் பின்னர் உடன்படிக்கை புதுப்பிக்கப்பட வேண்டும். | சபையின் அங்கீகாரத்துடன் உடன் படிக்கை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தற்போது அனேகமான நிறுவனங்களுடன் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | வாடகை உடன்படிக்கையின் பிரகாரம் இடையராமல் 03 மாதங்கள் வாடகை செலுத்தாத 235 கடை உரிமையாளர்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்காததுடன் கடை உரிமையாளரின் பெயர்களை பதிவு செய்து கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அதேபோல் 32 கடைகள் வர்த்தக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமல் மூடப்பட்டு காணப்பட்டது. | வாடகை செலுத்தாத கடை உரிமையாளர் தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டியிருந்ததுடன் மூடப்பட்ட கடைகளை வாடகைக்கு கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும் | சட்ட ரீதியான உடன்படிக்கை ஒன்று காணப்படாமையினால் அவ்வாறு செய்ய முடியாதிருந்தது. எதிர்காலத்தில் செயற்படுத்துவதற்கான முறையான செய்முறையொன்று தற்போது தயாரிக்கப்பட்டு வருகின்றது. |

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.5.1 சொத்ததுக்கள் ஆவணப்படுத்தாமை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| i. | காணி மற்றும் கட்டிடங்கள் மீதான விபரங்கள் அடங்கிய பதிவேடு ஒன்று காணிப் பிரிவினால் பேணப்பட்டிருந்த போதிலும் அதில் அனைத்துத் தகவல்களையும் உட்படுத்தியிருக்கவில்லை. | காணி மற்றும் கட்டிடங்களின் விபரங்கள் அடங்கிய பதிவேடு ஒன்று பேணப்பட வேண்டும். | சபையில் காணப்படும் கோவைகளின் மூலம் இந்தப் பதிவேடு தயாரிக்கப்பட்டிருந்ததுடன் காணிப் பதிவாளர் அலுவலகத்தில் வினவி மீதியான தகவல்களை பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் படி ஆலோசனை வழங்கப்பட்டது. |
| ii. | நகர சபையினால் பேணப்பட்டு வந்திருந்த காணி மற்றும் கட்டிடங்கள் பதிவேட்டின் பிரகாரம் 97 ஆதனங்கள் காணப்பட்ட போதும் கணக்காய்விற்று சமர்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் பிரகாரம் 75 ஆதனங்கள் மாத்திரம் காணப்பட்டன. | காணி மற்றும் கட்டிடங்கள் பதிவேடு நாளதுவரை ஆக்கப்பட்டு பேணப்பட வேண்டும். | சபையில் காணப்படும் கோவைகளின் மூலம் இந்தப் பதிவேடு தயாரிக்கப்பட்டவுடன் காணி பதிவாளர் அலுவலகத்தில் வினவி மீதியான தகவல்களை பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் படி ஆலோசனை வழங்கப்பட்டது. |

**3.5.2 சொத்துக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தாமை**

| | | | |
|---|---|---|---|
| i. | சபைக்குச் சொந்தமான ஆதனங்ளுக்காக முறையான பாதுகாப்பு நடவடிக்கை எடுக்கப்படாமையால் சபைக்கு சொந்தமான 03 காணிகள் அங்கீகாரமற்ற வதிபவர்கள் அனுபவித்துக்கொண்டு இருந்தனர் | சபைக்குச் சொந்தமான ஆதனங்கள் தொடர்பாக பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் | இது தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கும் எதிர்காலத்தில் பாதுகாப்பு நடைமுறைகள் மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| ii. | சபைக்குச் சொந்தமான 75 காணிகள் மற்றும் கட்டிட ஆதனங்களின் 36 ஆதனங்களின் உரிமையை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான காணி உறுதிகள் அல்லது சாட்டுததல் கட்டளைகள் காணப்படவில்லை. | சபைக்குச் சொந்தமான ஆதனங்களின் உரிமையை உறுதிப்படுத்தப்பட வேண்டும். | இது தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கும் எதிர்காலத்தில் பாதுகாப்பு நடைமுறைகள் மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| iii. | சபைக்குச் சொந்தமான காணிகள் தொடர்பாக வருடாந்த சொத்துக்கள் மைமையாதல் ஒன்று நீண்டகாலம் ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சபைக்குச் சொந்தமான காணிகள் தொடர்பாக வருடாந்த சொத்துக்கள் மைமையாதல் மேற்கொள்ளப்பட வேண்டும் | இது தொடர்பாக 2019 ஆண்டு செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

**3.5.3 சொத்துக்கள் மூலம் பெற வேண்டிய வருமானத்தை பெற்றுக்கொள்ளாமை**

| | | |
|---|---|---|
| கல்கிஸ்ஸ ஹோட்டல் வீதியில் 01 ரூட் 4.1 பேர்சஸ் அளவான காணி வாகனத் தரிப்பிடம் ஒன்று நடாத்துவதற்கு கல்கிஸ்ஸ ஹோட்டலுக்கு வாடகைக்கு கொடுத்த போது உடன்படிக்கையில் காணப்பட்ட குறைபாடுகள் காரணமாக 2018 திசெம்பர் 31 திகதி வரை இந்த ஆதனத்தின் நிலுவை வாடகை ரூபா 5,116,709 தொகையாக இருந்ததுடன் அத்தொகையை வாடகையாளரிடம் அறவீடு செய்ய முடியாதிருந்தது. | புதிய உடன்படிக்கை ஒன்று மேற்கொள்வதற்கு அல்லது திருத்தம் செய்து நிலுவை வாடகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | உடன்படிக்கையில் குறிப்பிடப்பாடாத விடயம் ஒன்று தொடர்பான செயற்படும் இயலுமை மீது காணப்படும் சட்டம் சார் நிலைமை தொடர்பாக அறிவுரை பெற்றுக் கொள்வதற்காக அனுப்பப்பட்டுள்ளதுடன் அறிவுரையின் பிரகாரம் தொடர் நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்க்கின்றேன். |

### 3.5.4 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்ட ஆதனங்கள்

| | | |
|---|---|---|
| சபைக்குச் சொந்தமான பேசர் மாவத்தையில் அமைந்துள்ள காணி 1999 ஆகஸ்ட் 27 திகதி முதல் அங்கீகாரமின்றி அனுபவித்து வரும் ஆட்களிடம் ஆதனத்தின் உரிமையை மீண்டும் பெறுவதற்காக அந்த நிறுவனத்திற்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. | சபைக்குச் சொந்தமான ஆதனங்களின் பாதுகாப்பு தொடர்பாக கவனம் செலுத்தப்பட வேண்டும் | தீர்ப்பின் பிரகாரம் 2019.10.25 ஆந் திகதி எழுத்து மூல விரிவுரைக்காக அழைக்கப்பட்டுள்ளது. |

### 3.5.5 விளைவற்ற குறைபயன்பாட்டுச் சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மூடப்பட்டு மற்றும் இலச்சினை வைக்கப்பட்டிருந்த 32 கடைகளை மீண்டும் உரித்தாக்கி வேறு வாடகையாளர்களுக்கு வாடகைக்கு கொடுத்து வருமானம் உழைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை | வருமானம் உழைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் | தற்போது வீட்டுவரியை இரத்துச் செய்து இலச்சினை பதிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

### 3.5.6 வருடாந்த பண்ட / இருப்புச் கணிப்பீடு

| | | |
|---|---|---|
| 2018 ஆண்டிற்கான வருடாந்த பண்டக் கணிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டு அறிக்கைகள் சமர்ப்பித்து இருக்கவில்லை. | வருடாந்த பண்டக் கணிப்பீட்டறிக்கை குறிப்பிட்ட தினத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும் | மிக விரைவில் சமர்பிக்கின்றேன். |

### 3.5.7 வாகனப் பயன்பாடு

| | | |
|---|---|---|
| (அ) 12 வாகனங்கள் பாவனைக்கு உதவாத நிலையில் காணப்பட்டவுடன் அவற்றில் சில வாகனங்கள் நீண்ட காலமாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பாவனைக்கு உதவாத நிலையில் காணப்பட்ட வாகனங்கள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்க வேண்டும் | சபையின் பாவனையில் இருந்து அகற்றப்பட்டிருந்த வாகனங்களை பராமரித்து ஓட்டத்திற்காக பயன்படுததுவது ஆக்க பூர்வமாக காணப்படாத போது வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் அப்புறப்படுத்தல் மேற்கொள்ளப்படும்.அதன் பிரகாரம் குறிப்பிடப்பட்டுள்ள 12 வாகனங்களும் டென்டர் மூலம் விற்பனை செய்வதற்காக நடவடிக்கை ஆரம்பிக்கப் பட்டு இருந்ததுடன் தற்போது |

| | | | |
|---|---|---|---|
| | | | டெண்டர்களுக்கான பத்திரிகை அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. |
| (ஆ) | சபைக்குச் சொந்தமாக 239 வாகனங்கள் காணப்பட்ட போது 04 டிரக்டர்கள் 01, லொரி 06, வான்கள் 02 கார்கள், 05 முச்சக்கர வண்டிகள் என்பன வாடகை அடிப்படையில் பெற்றிருந்த உடன் வாடகைக்கு பெற்றிருந்ததுடன் 18 வாகனங்களுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 13,857,618 தொகை ஒன்று வாடகையாக செலுத்தப்பட்டிருந்தது. | உச்ச மட்ட உற்பத்தி திறனை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் சில வாகனங்களின் தேவைகள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட வேண்டும். | சபையில் அன்றாட சாட்டப்படுகின்ற கருமங்களை நிறைவேற்றும் போது ஏற்படுகின்ற பல்வேறு விதமான தேவைகளின் படி அடிக்கடி ஒவ்வொரு திணைக்களத்தினாலும் வேண்டப்படுகின்ற கோரிக்கைகளுக்கு கவனம் செலுத்தி சபையின் வாகனங்கள் மற்றும் சாரதிகள் போதியளவாக காணப்படாத போது அந்தக் கடமைகளை தாமதமின்றி வினைத் திறனுடன் நிறைவேற்றுவதற்காக சபையினால் வாடகை அடிப்படையில் வாகனங்கள் பெறப்பட்டுள்ளது. இவ்வாறு வாடகை அடிப்படையில் வாகனங்களைப் பெறுவது அனுகூலமானதாகும். |

**3.6 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

-------------------------------------------------------------

| | | | |
|---|---|---|---|
| (அ) | வனரத்ன பாதையில் இருந்து பென்சேக்கா பாதை வரையின் பாதையை திறப்பதற்காக காணியை தனதாக்குவதற்காக 2018 பெப்ரவரி மாதம் ரூபா 4,500,000 ற்கான தொகை ஒன்று பிரதேச செயலாளிடம் வைப்புச் செய்யப்பட்டு இருந்த போதிலும், 2019 மே 20 திகதி அளவிலும் காணியை தனதாக்குவதற்கான நடவடிக்கைகள் எடுத்திருக்க வில்லை.<br>காணிகளை தனதாக்கும் போது சில நபர்களின் காணிகளின் பகுதி ஒன்று மற்றும் வீடுகளின் பகுதி ஒன்று உடைப்பதற்கும் கழிப்பறைகளை உடைத்தல் ஆகிய விடயங்களின் மூலம் பாரிய நட்டம் ஒன்று ஏற்படுதல் அனேகமானோருக்கு தற்போது காணப்படும் மாற்று வழி | சபை நிதியம் தேவையான மற்றும் அனேகமானோருக்கு பயன்படுத்தக் கூடிய கருமங்களுக்காக ஈடுபடுத்தப்பட வேண்டும் | கணப்பீடு ஒன்று மேற்கொண்டு தெளிவான பதில் ஒன்று அனுப்புவதற்கு எதிர்பார்க்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| | போதியளவாக இருத்தல் மற்றும் ஏற்படும் நட்டங்களை கணிக்கும் போது 02 குடும்பங்களுக்கு மாத்திரம் நேரடி நுழைவுப் பாதை கிடைத்தல் இந்தப் பாதையை நிர்மாணிப்பதற்காக மேற்கொள்ளப்படும் செலவு சிக்கமற்ற ஒன்றாகும். | | |
| (ஆ) | சரனங்கர சிறுவர் நூலகத்தின் நீர் சிட்டை செலுததப்படாமையினால் நீர் தொடர்பு துண்டிக்கப்பட்டு இருந்ததுடன் மீண்டும் தொடர்பினை பெற்றுக் கொள்வதற்காக ரூபா 3450 ற்கான மேலதிக செலவு ஒன்று மேற்கொள்ள நேரிட்டிருந்தது | பொறுப்புச் செல்ல வேண்டிய உத்தியோகத்தர்களிடம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கணப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டு தொளிவான பதில் ஒன்று அனுப்புதற்கு எதிர்பார்க்கின்றேன். |

**3.7 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

| | | | |
|---|---|---|---|
| (அ) | களஞ்சியப் பொறுப்பாளர் பண்டங்கள் வழங்கும் கட்டளைப் பத்திரத்திரங்களை திருத்துவதன் மூலம் மேற்கொள்ளப்பட்ட முறைகேடான பயன்பாட்டின் காரணமாக சபைக்கு ரூபா 131,475 ற்கான நட்டம் ஒன்று ஏற்பட்டிருந்தது. | நிதிப் பிரமாணம் 156 இன் படி நட்டத்தை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | இது தொடர்பாக ஆரம்ப விசாரனை நடாத்தப்படுவதுடன் அதன் மூலம் ஏற்பட்டுள்ள நட்டத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | 2011 நவம்பர் 11 திகதி முதல் 2016 ஏப்ரல் வரை சேவை இடை நிறுத்தப்பட்டிருந்த ஊழியர் ஒருவருக்காக ரூபா 1,413,903 ற்கான சம்பளம் மற்றும் படி செலுத்தப்பட்டிருந்தவுடன் மீளாய்வாண்டு இறுதி அளவிலும் அப்பணத்தை திருப்பி அறவீடு செய்வதற்கு முடியாதிருந்தமையால் அதற்காக கல்கிஸ்ஸ பிரதான நீதிவான் நீதிமன்றில் B/1799/16 கீழ் வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்டிருந்தது. | பணத்தை திருப்பி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் சம்பளக் கொடுப்பனவுடன் தொடர்புடைய பொறுப்புச் சொல்ல வேண்டிய உத்தியோகத்தர்களின் கவனம் செலுத்தப்பட வேண்டும். | இது தொடர்பாக கல்சிஸ்ஸ நீதிவான் நீதிமன்றத்தின் இலக்கம் **B/1799/16** கீழ் வழக்கொன்று விசாரனை மேற்கொள்ளப்படுவதினால் சட்டமா அதிபரின் ஆலோசனை பெறுவதற்காக அனுப்பப்பட்டுள்ளதால் வழக்கின் தீர்ப்பின் பிரகாரம் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அறிவிக்கின்றேன். |
| (இ) | ஓவ்வொரு நூலகங்களில் இருந்து வாசகர்கள் வெளியே எடுத்துச் செல்வதற்காக வழங்கியிருந்த புத்தகங்களின் காலம் முடிவுற்று நீண்டகாலம் கழிந்திருந்த போதிலும் மீண்டும் நூலகத்திற்கு ஒப்படைத்திருக்காத 58 புத்தகங்கள் தொடர்பாக பெறுமதியை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுமதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | இது தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவூட்டி குறிப்பிட்ட ஆட்களுக்கு கடிதம் அனுப்பியிருந்ததுடன் வெற்றிகரமான பதில் ஒன்று கிடைக்காவிடின் பிணையாளரின் வீத வரியுடன் இதனையும் சேர்த்து அறவீடு செய்வதற்கு அறிவுரை |

| | | |
|---|---|---|
| | | வழங்கியுள்ளேன். |

**3.8 பெறுகை**

**3.8.1 பெறுகைத் திட்டம்**

| | | |
|---|---|---|
| 2018 ஆண்டிற்காக உரிய முறையில் தயாரிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்பட்ட பெறுகைத் திட்டம் ஒன்று சமர்பிக்கப்பட்டிருக்காததுடன் 2018 ஓகஸ்ட் மாதம் முதல் பெறுகைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு இருந்த போதிலும் அதற்கான அங்கீகாரம் பெற்றிருக்க வில்லை. | வருடாந்தம் பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும் | 2019 ஆண்டிற்கான பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. |

**3.8.2 வழங்கல்கள் மற்றும் சேவைகள்**

| | | |
|---|---|---|
| மடிக் கணினிகள் கொள்வனவு செய்வதற்காக தெரிவு செய்யப்பட்ட வழங்குனர் கட்டளையிடப்பட்ட பின்னர் 2-4 வாரங்களில் வழங்குவதற்கு இனங்கியிருந்த போதிலும் பின்னர் கால நீடிப்புச் செய்யப்பட்டிருந்தது அவ்வாறாயினும் இனங்கியிருந்த கூறுவிலையில் வழங்குவற்கு முடியாது என அறிவித்திருந்த காரணத்தினால் இரண்டாவது வழங்குனரிடம் பண்டம் கொள்வனவு செய்திருந்ததுடன் முதலாவது வழங்குனரை கரை நிரல் படுதத்தியிருக்கவில்லை. | இவ்வாறான சந்தர்ப்பங்களில் வழங்குனர்களை கரை நிரல் படுத்த வேண்டும். | **E-WIS** நிறுவனத்தினால் கணிணி உரிய நேரத்தில் வழங்குவற்கு முடியாதிருந்தால் அந்த நிறுவனத்திற்கு குறிப்பிட்ட கட்டளையை வழங்குவதை இரத்துச் செய்து **STC** நிறுவனத்தில் இருந்து கணிணிகள் பெற்றுக் கொள்வதற்கு நிறிக் குழுவின் பரிந்துரை மற்றும் சபையின் அங்கீரத்தின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டது. |

**3.9.3 ஒப்பந்த நிருவாகம்**

| | | | |
|---|---|---|---|
| (அ) | பொது நிதியத்தில் இருந்து செயற்படுத்தப்பட்ட 31 செயற் திட்டங்களின் மதிப்பீட்டு பெறுமதியை மிகைத்து ஒப்பந்தக் காரர்களுடன் உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருந்தமையினால் மதிப்பீட்டுத் தொகையை விட ரூபா 2,608,128 தொகை அதிகரித்திருந்தது | சரியாக மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும் | இந்த 31 செயற்திட்டங்களின் ஒப்பந்த காரர்கள் கூறுவிலைகள் மதிப்பீட்டுப் பெறுமதியை மிகைத்து 15% 20% பெறுமதிகளில் சமர்ப்பித்திருந்தது. எனினும் சபைக்கு அனுகூலமான முறையில் மதிப்பீட்டுத் தொகையை விட 10 % அதிகரிக்காத முறையில் ஒப்பந்தக் காரர்களிடம் கழிவுகள் பெற்றுக் கொண்டு ஒப்பந்த வேலைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | இரத்மலான கொத்தலாவலபுர புகையிரத விளையாட்டுத் திடலில் திறந்த வெளி உடல் வளர்ச்சி உபகரணங்கள் வழங்கி பொருத்தும் செயற்திட்டத்தின் ஒப்பந்த வேலை வழங்கும் போது உடன்படிக்கை மேற்கொள்வதற்காக 01 வருடத்தில் காலவதியாகக் கூடிய ரூபா 62,556 தொகை பெறுமதியான செயலாற்றுகை பிணைமுறி சமர்ப்பிக்கப்பட வேண்டுமென குறிப்பிட்டிருந்த போதிலும், 2018 திசெம்பர் 24 ஆந் திகதி உடன்படிக்கை கைச்சாத்திடும் போது 03 மாதங்கள் செல்லுபடியாகும் காலத்தை உடைய செயலாற்றுகை பிணைமுறி ஒன்றினை சமர்ப்பித்து உடன்படிக்கை மேற் கொள்ளப்பட்டிருந்தது. இதன் காரணமாக 2019 மார்ச் 04 ஆந் திகதி அளவில் பிணை முறியின் செல்லுபடியாகும் காலம் முடிவடைந்திருந்ததுடன் வேலைகள் முடிவடைந் திருக்கவில்லை. மேலும் பராமரிப்புக் காலம் தொடர்பாகவும் கவனம் செலுத்தியிருக்கவில்லை. | உடன்பட்ட காலத்திற்குள் செயற்திட்டம் நிறைவேற்றப்பட வேண்டும். | இந்த ஒப்பந்தவேலைக் காக வழங்கப்பட்டிருந்த பிணைமுறியின் பிரகாரம் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டாலும் நிர்மாண வேலைக்கான கொடுப்பனவு மேற்கொள்ள முன்னர் பிணைமுறியின் காலத்தை நீடிப்பதற்கு ஒப்பந்தக்காரருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (இ) | நேர்கூலி அடிப்படையில் பாதைகளில் தார் பூசும் போது 03 செயற்திட்டங்களில் உரிய நியமங் களின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டி ருக்காமையால், பூர்த்தி செய்வதில் உற்பத்தித் திறன் குறைந்திருந்தது. | உரிய நிமயங்களு க்கு ஏற்ப செயற் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டும். | பதில் அனுப்பியிருக்க வில்லை. |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 தீர்க்கப்பட்டிருக்காத அவதானிப்புக்கள் மற்றும் பதில் அளிக்கப்படாத கணக்காய்வு ஐய வினாக்கள்

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக வழங்கப்பட்டிருந்த 18 கணக்காய்வு ஐய வினாக்களுக் காக 2019 மே 24 திகதி வரை பதில் / விளக்கமளித்தல் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை. | குறிப்பிட்ட காலவறையுள் பதில் அனுப்பப்பட வேண்டும். | 07 பதில்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டன. 04 பதில் களுக்கான வரைபுகள் தயாரிக்கப்பட்டு உள்ளதுடன் 03 இற்கான பதில்கள் வரைபுகள் தயாரிக்கப்படுகின்றது. ஏனைய 04 கணக்காய்வு ஐய வினாக்களும் ஏப்ரல் மாதம் இறுதிப்பகுதியில் அல்லது மே மாத ஆரம்பத்திலே எமக்கு கிடைக்கப்பெற்றன. |